நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 208 /2023

## P.W. 1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராமசாமி |
| தந்தை / கணவர் பெயர் | : | சங்கரன் |
| கிராமம் | : | பாலமலை |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 60 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2026–ஆம் வருடம், ஜனவரி மாதம், 20–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.12PM.

1. நான் தற்போது பாலமலையில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கும், எதிரிகளுக்கும் மூங்கில் வெட்டுவது சம்பந்தமாக பிரச்சினை இருந்து வருகிறது. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு மாலை 5.00 மணி அளவில் நான் வீட்டில் இருந்து ஊரில் உள்ள கடைக்கு சென்று பொருட்கள்

வாங்கிவிட்டு வரும்போது மூன்று எதிரிகளும் என்னை கல், மற்றும் மூங்கிலால் என்னை அடித்தாகள்.

2. உடம்பில் எல்லா இடங்களிலும் வலி ஏற்பட்டது. நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கல் மற்றும் தடியால் எதிரிகள் அடித்தார்கள். மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு நான் சிகிச்சையில் சேர்ந்தேன். அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் அதில் கைரேகை வைத்தேன். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கல் மற்றும் விறகு குச்சி அ.சா.பொ. 1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** ஆஜர் எதிரிகள்தான் என்னை அடித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவத்துக்கு முன்பாக சுமார் 10 வருடங்களாகவே எனக்கும் எதிரிகளுக்கும் நிலம் சம்பந்தமாக பிரச்சினை இருந்து வருகிறது. எனது வீட்டிற்கு அருகில் காட்டு பகுதியில் சம்பவம் நடைபெற்றது. எனது வீட்டில் இருந்து மேற்கு புறம் அரை கிலோ மீட்டர் தூரத்தில் வனப்பகுதியில் சம்பவம் நடைபெற்றது. ஊரில் இருக்கும் மளிகை கடையில் பொருட்கள் வாங்கிகொண்டு வனப்பகுதியை தாண்டிதான் எங்கள் வீட்டிற்கு செல்ல வேண்டும். சம்பவத்து அன்று மளிகை சாமான்கள் வாங்குவதற்காக தான் அந்த வழியாக சென்றேன்.
2. சம்பவ இடத்திற்கு அருகில் வீடுகள் எதுவும் இல்லை. சம்பவ சமயத்தில் ஆட்கள் யாரும் இல்லை. கையளவு தடிமன் உள்ள மூங்கில் தடியால் எதிரிகளுள் ஒரு நபர் என்னை அடித்தார். அந்த நேரத்தில் என்னை யார் அடித்தார் என்று நான் கவனிக்கவில்லை. நான் நீதிமன்றத்தில் சொன்னவாறுதான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன். போலீசார் என்னை விசாரிக்கும்போதும் கையளவு தடிமன் கொண்ட மூங்கில் தடி மற்றும் இரண்டு கை அளவுள்ள கல்லால்தான் என்னை அடித்ததாக சொன்னேன். விறகு தடியால் என்னை அடித்ததாக காவல் துறை விசாரணையில் சொல்லவில்லை.
3. நீதிமன்றத்தில் உள்ள சான்று பொருட்கள் 1 மற்றும் 2 பொருட்களால் என்னை அடிக்கவில்லை. இந்த சான்று பொருட்கள் இந்த சம்பவத்திற்கு தொடர்பு இல்லாதது என்றால் சரிதான். சம்பவம் நடந்து மறுநாள்தான் நான் மருத்துவமனைக்கு சென்றேன். இந்த சம்பவம் நடக்கும்போது எனது மனைவி

சித்தாயி எங்களது வீட்டில் இருந்தார். அவருக்கு இதை பற்றி தெரியாது. நான் காவல் துறை விசாரணையில் சம்பவத்தின்போது எனது மனைவியும் இருந்ததாக சொல்லவில்லை.

4. நான் சொன்னவாறு உண்மையில் சம்பவம் நடைபெற்று இருந்தால் அடிப்பட்டவுடனே நான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றிருப்பேன் என்றால் சரியல்ல. நாங்கள் பாலமலையில் குடியிருப்பதாலும், அங்கு சாலை வசதி மற்றும் பேருந்து வசதி இல்லாததாலும் விடியும் வரை இருந்துவிட்டு ஜீப் பிடித்து மருத்துவமனைக்கு வந்து சிகிச்சையில் சேர்ந்தேன். எங்கள் ஊரில் தி.க. கட்சியை சார்ந்த வெள்ளைசாமி என்பவர் நீ போய் கேஸ் கொடு என்று சொன்னதால்தான் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–01.37PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 208 /2023

## P.W. 2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சித்தாயி |
| தந்தை / கணவர் பெயர் | : | ராமசாமி |
| கிராமம் | : | பாலமலை |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 2 |
| வயது | : | 50 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜனவரி மாதம், 20–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.38PM.

1. நான் தற்போது பாலமலையில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். எங்களுக்கும், எதிரிகளுக்கும் மூங்கில் வெட்டுவது சம்பந்தமாக பிரச்சினை இருந்து வந்தது. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு எனது கணவர் மளிகை கடைக்கு போய்விட்டு வீட்டிற்கு

வரும் வழியில் நவுல் ஊத்து காடு பாதையில் எதிரிகள் அடித்து போட்டு விட்டார்கள். நான் சென்று பார்த்து எனது கணவரை வீட்டிற்கு அழைத்து வந்து பிறகு மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்கு சேர்த்தேன்.

2. எதிரிகள் குமார் கல்லாலும், இளையராஜா தடியாலும், சண்முகம் காலாலும் எனது கணவரை அடித்தார்கள். என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 கல் மற்றும் அ.சா.பொ.2 விறகுகுச்சி ஆகியவற்றால் தான் எதிரிகள் எனது கணவரை அடித்தார்கள். ஆஜர் எதிரிகள்தான் எனது கணவரை அடித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக விசாரிப்பதற்காக போலீசார் சம்பவ இடத்திற்கு வரவில்லை. எங்களுக்கும் , எதிரிகளுக்கும் நீண்ட காலமாக நிலப்பிரச்சினை இருந்து வருவதால் பழி வாங்கும் எண்ணத்தில் எனது கணவர் கொடுத்த பொய் புகாருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:—01.50PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/—நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 208 /2023

## P.W. 3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பழனியம்மாள் |
| தந்தை / கணவர் பெயர் | : | பெருமாள் |
| கிராமம் | : | ஓலையூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 3 |
| வயது | : | 30 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜனவரி மாதம், 20–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.50PM.

1. நான் தற்போது ஓலையூரில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ராமசாமி மற்றும் அ.சா.2 சித்தாயி எனது பெற்றோர் ஆவார்கள். எங்களுக்கும் , எதிரிகளுக்கும் மூங்கில் வெட்டுவது சம்பந்தமாக பிரச்சினை இருந்து வந்தது. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு என்னுடைய அப்பா

அ.சா.1 ராமசாமி பாலமலையில் உள்ள கடைக்கு சென்று விட்டு வீட்டிற்கு வரும் வழியில் மூன்று எதிரிகளும் கல் மற்றும் தடியால் அடித்துவிட்டதாக சொன்னார்கள். நான் தகவல் தெரிந்து மருத்துவமனை சென்று எனது அப்பாவிடம் கேட்டேன். எதிரிகள் அடித்துவிட்டதாக சொன்னார்.போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. நான் நேரில் பார்க்கவில்லை. இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. சம்பவம் தொடர்பாக போலீசார் சம்பவ இடத்திற்கு வரவும் இல்லை. எனது குடும்பத்திற்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் உள்ள நிலப்பிரச்சினை சம்பந்தபட்ட முன்விரோதம் காரணமாக எனது அப்பா கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–01.58PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**